# මුදල් අමාත්‍යාංශය
# நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE



මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PFD/ITIT/INCM/pro
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2019.08.15

**அரச நிதிச் சுற்றுநிருப இல: 06/2019**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரச வங்கிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரசாங்க உடமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரசாங்க நிறுவனங்களுக்கான பொதுக் காப்புறுதி ஏற்பாடு**

அரசாங்க நிறுவனங்கள் அரச உடமை காப்புறுதிக் கம்பனிகளிலிருந்து மாத்திரம் காப்புறுதி சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கோருகின்ற வகையில் 04/2015 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் வெளியிடப்பட்ட சுற்றுநிருப அறிவுருத்தலின்படி, நாட்டிலுள்ள காப்புறுதிச் சந்தைக்கான அதிக போட்டித் தன்மைமிக்கதும் சிறந்த வள நிலைமையினைக் கொண்டதுமான நிறுவனங்களுக்கு வசதியளிக்கும் வகையில் இத்தால் திருத்தப்படுகின்றது.

02. இதற்கமைவாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் (Insurance Regulatory Commission of Sri Lanka) கீழ் பதிவு செய்யப்பட்ட போட்டித் தன்மையின் அடிப்படையில் முகவர்கள் / தரகர்களிடமிருந்து காப்புறுதி சேவைகளைப் பெற்றுக் கொள்ளாத சந்தையில் தொழிற்படும் காப்புறுதிச் சேவை வழங்குநர்களிடமிருந்து அரசாங்க நிறுவனங்களினால் பொதுக் காப்புறுதியினைப் பெற்றுக் கொள்ள முடியும். காப்புறுதி சேவைகளை பெற்றுக் கொள்வதில் நிறுவனங்களின் தலைவர்கள் ஏனைய விடயங்களை கருத்திற் கொள்வது போன்று குறித்த நிறுவனங்களுக்கு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியான வகையில் தரமான சேவைகள், அறவிட வேண்டிய ஆபத்து இயல்வு மற்றும் அதனுடன் தொடர்பான செலவினம் என்பவற்றினைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் காப்புறுதிச் சேவை வழங்குநர்களுக்கு விலை மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்படுதல் வேண்டும்.

03. மேலும், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவுடன் கலந்துரையாடுவதன் பேரில் குறித்த காப்புறுதி வழங்குநருடன் கொடுக்கல்வாங்களில் ஈடுபடுவதற்கு முன்னர் தொடர்புடைய காப்புறுதிக் கம்பனியின் நம்பகத்தன்மை மற்றும் ஆற்றலினை உறுதிப்படுத்திக் கொள்வது பொருத்தமானதாகும். இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இடைநிறுத்தல் அறிவித்தல்கள் (Suspension Notices) ஆணைக்குழுவின் இணையத் தளத்திற்கு மேலதிகமாக அரச நிதித் திணைக்களத்தின் இணையத் தளத்தின் மூலமும் வெளியிடப்படும்.

04. மேற்குறித்த விடயம் தொடர்பான 2015.07.14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபம் இத்தால் நீக்கப்படுவதுடன், குறித்த இச்சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகள் 2019.08.19 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும்.

05. இந்த சுற்றுநிருபத்தினை www.treasury.gov.lk என்ற அரச நிதித் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யமுடியும். இச்சுற்றுநிருபம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 011-2484614 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

**ஒப்பம்: பணிப்பாளர் நாயகம்**
**அரச நிதித் திணைக்களம்**

**ஒப்பம்: ஆர்.எச்.எஸ். சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. அதிமேதகு சனாதிபதியின் செயலாளர்
2. கௌரவ பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவை செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. பணிப்பாளர் நாயகம், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு : அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டமையினை அறிவிப்பதற்கு
6. பணிப்பாளர் நாயகம், அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்